ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ தழைகளும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தழைகளும் ॥

காலிப்பின் வரும் கண்ணனைக் கண்டு
கன்னியர் காமுறல்

‡தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்⋆
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி⋆
குழல்களும் கீதமும் ஆகி⋆ எங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு⋆
மழைகொலோ வருகின்றதென்று சொல்லி⋆
மங்கைமார் சாலக வாசல் பற்றி⋆
நுழைவனர் நிற்பனர் ஆகி எங்கும்⋆
உள்ளம் விட்டூண் மறந்தொழிந்தனரே (1)

வல்லி நுண் இதழ் அன்ன ஆடை கொண்டு⋆
வசை அறத் திருவரை விரித்துடுத்து⋆
பல்லி நுண் பற்றாக உடைவாள் சாத்திப்⋆
பணைக்கச்சுந்திப் பல தழை நடுவே⋆
முல்லை நல் நறுமலர் வேங்கை மலர்
அணிந்து⋆ பல் ஆயர் குழாம் நடுவே⋆
எல்லியம் போதாகப் பிள்ளை வரும்⋆
எதிர் நின்றங்கினவளை இழவேன்மினே (2)

சுரிகையும் தெறி வில்லும் செண்டு கோலும்⋆
மேலாடையும் தோழன்மார் கொண்டோட⋆
ஒரு கையால் ஒருவன் தன் தோளை ஊன்றி⋆
ஆநிரையினம் மீளக் குறித்த சங்கம்⋆
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்⋆
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள்⋆
அருகே நின்றாள் என்பெண் நோக்கிக் கண்டாள்⋆
அது கண்டிவ்வூர் ஒன்று புணர்க்கின்றதே (3)

குன்றெடுத்தாநிரை காத்த பிரான்⋆
    கோவலனாய்க் குழல் ஊதி ஊதிக்⋆
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு⋆
    கலந்துடன் வருவானைத் தெருவில் கண்டு⋆
என்றும் இவனை ஒப்பாரை நங்காய்⋆
    கண்டறியேன் ஏடி! வந்து காணாய்⋆
ஒன்றும் நில்லா வளை கழன்று⋆ துகில்
    ஏந்திள முலையும் என் வசம் அலவே (4)

சுற்றி நின்றாயர் தழைகள் இடச்⋆
    சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து⋆
பற்றி நின்றாயர் கடைத்தலையே⋆
    பாடவும் ஆடக் கண்டேன்⋆ அன்றிப் பின்
மற்றொருவர்க்கென்னைப் பேசல் ஒட்டேன்⋆
    மாலிருஞ்சோலை எம் மாயற்கல்லால்⋆
கொற்றவனுக்கிவள் ஆம் என்றெண்ணிக்⋆
    கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே (5)

சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றி மேல்⋆
    திருத்திய கோறம்பும் திருக் குழலும்⋆
அந்தர முழவத் தண் தழைக் காவின்கீழ்⋆
    வரும் ஆயரோடுடன் வளைகோல் வீச⋆
அந்தம் ஒன்றில்லாத ஆயப் பிள்ளை⋆
    அறிந்தறிந்திவ் வீதி போதுமாகில்⋆
பந்து கொண்டான் என்று வளைத்து வைத்துப்⋆
    பவளவாய் முறுவலும் காண்போம் தோழீ! (6)

சாலப் பல் நிரைப் பின்னே தழைக் காவின்கீழ்⋆
    தன் திருமேனி நின்றொளி திகழ⋆
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தால்
    அணிந்து⋆ பல் ஆயர் குழாம் நடுவே⋆
கோலச் செந்தாமரைக் கண் மிளிரக்⋆
    குழல் ஊதி இசை பாடிக் குனித்து⋆ ஆயரோடு

ஆலித்து வருகின்ற ஆயப் பிள்ளை⋆
அழகு கண்டென்மகள் அயர்க்கின்றதே (7)

சிந்துரப் பொடிக் கொண்டு சென்னி அப்பித்⋆
திருநாமம் இட்டங்கோர் இலையந் தன்னால்⋆
அந்தரம் இன்றித் தன் நெறி பங்கியை⋆
அழகிய நேத்திரத்தால் அணிந்து⋆
இந்திரன் போல் வரும் ஆயப் பிள்ளை⋆
எதிர் நின்றங்கினவளை இழவேல் என்ன⋆
சந்தியில் நின்று கண்டீர் நங்கை தன்⋆
துகிலொடு சரிவளை கழல்கின்றதே (8)

வலங்காதின் மேல் தோன்றிப் பூவணிந்து⋆
மல்லிகை வனமாலை மௌவல் மாலை⋆
சிலிங்காரத்தால் குழல் தாழ விட்டுத்⋆
தீங்குழல் வாய்மடுத்தூதி ஊதி⋆
அலங்காரத்தால் வரும் ஆய்ப் பிள்ளை⋆
அழகு கண்டென்மகள் ஆசைப் பட்டு⋆
விலங்கி நில்லாதெதிர் நின்று கண்டீர்⋆
வெள்வளை கழன்று மெய்ம் மெலிகின்றதே (9)

‡விண்ணின் மீதமரர்கள் விரும்பித் தொழ⋆
மிறைத்தாயர் பாடியில் வீதியூடே⋆
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக்
கண்டு⋆ இள ஆய்க் கன்னிமார் காமுற்ற
வண்ணம்⋆ வண்டமர் பொழில் புதுவையர் கோன்⋆
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்⋆
பண் இன்பம் வரப் பாடும் பத்தர் உள்ளார்⋆
பரமான வைகுந்தம் நண்ணுவரே (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖